**செய்தி வெளியீடு எண்: 74** **நாள் 24.1.2008**

**இந்து சமய அறநிலையத்துறை செய்திக் குறிப்பு**

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில், பக்தர்கள் நேர்த்திக் கடனாக வழங்கும் பசுக்கள், காளைகள் மற்றும் கன்றுகளை பராமரிப்பது தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளை ஆய்வு செய்து, அவற்றைத் தீர்ப்பதற்காக, நீண்ட கால திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்று (24.1.2008) இந்து சமய அறநிலையத்துறை உயர் அலுவலர்கள், கால்நடை பராமரிப்புத்துறை உயர் அலுவலர்கள், மடாதிபதிகள், விலங்குகள் நல வாரிய அலுவலர்கள், ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் அவர்கள், தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, செயலாளர், திரு ஜி.சந்தானம், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை, சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், திரு த.பிச்சாண்டி, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத்துறை ஆணையர் திரு. பி.ஆர். சம்பத், இ.ஆ.ப., இந்திய விலங்குகள் வாரிய துணை தலைவர், திரு அப்பாஜிராவ், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், பேரூராதீனம், தர்மபுர ஆதீனம், கோவிலூர் மடம், பொம்மபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், அரிஹந்தகிரி திருமலை, திகம்பர் ஜெயின் மடம் ஆகியோரின் பிரதிநிதிகள், கோசாலை பராமரிப்பு ஆர்வலர் திரு டி.என். முகுந்தன், ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**